வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   பிரதி விலை: சதம் 20   தொலைபேசி: 356

புத்-அசு]   யாழ்ப்பாணம்- ஆனந்த ஞு ஆவணிமீ எ-உ வெள்ளிக்கிழமை (23-8-1974)   [இல: கஅ

## சகலருக்கும் அன்பு காட்டுதலே

# சைவ நெறியாதும்!

## மாவட்ட நீதிபதியவர்களின் மதியுரை.

**"போக்க மிக்கவர் பூவும் நீருங் கண்டு
நக்கு நிற்பர் அவர்தமை நாணியே"**

கலாஜோதி இளைஞர் ஒன்றியம் நடாத்திய 10 ஆவது ஆண்டு சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா, ஆவணித் திங்கள் 1ம் நாள் (17—8—74) சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வண்ணார்பண்ணை, தட்டாதெரு மாநகர சபைப் பூங்காவில் மாண்புமிகு K. V. நவரத்தினம் (நீதிபதி, ஊர்காவற்றுறை) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு சிவா. செல்லையா (யாழ்.மாவட்ட நீதிபதி) அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். திருமதி சிவா. செல்லையா அவர்கள் பரிசில் வழங்கினர். மாண்புமிகு சிவா. செல்லையா அவர்கள் உரையாற்றிய பொழுது குறிப்பிட்டதாவது:—

என்னை இந்த விழாவுக்கு அழைத்தபோது ஆங்கிலத்தில் கல்வி கற்றதனல் இப்படிச் சபையில்வந்து திருப்தியான செந்தமிழில் பேசத் தைரியம் இல்லாததனல் அதற்குப் பின் வாங்கினேன். ஆனல் அழைக்க வந்த தூதுவ ஆதைத்தக்க காரணமென்று ஏற்றுக் கொள்ளாததனலும், அவர்கள் தந்த தைரிய வார்த்தைகளினலும் தான் நான் இங்கு வந்திருக்கின்றேன். எனவே எனது சொற்களிலாவது, பேச்சிலாவது ஏதாவது குறைபாடுகள் இருந்தால் உங்கள் மன்னிப்பைக் கோருகின்றேன். வண்ணார்பண்ணை இளைஞர் 1949ம ஆண்டில் கஷ்டப்பட்டு இந்தச் சமூக மன்றத்தைத் தொடங்கி அதன் பின்னைய வருஷங்களில் அவர்களின் ஊக்கத்தினலும்; ஒத்துழைப்பினலும் பல வசதிகளை உண்டாக்கிச் சமூக சேவைகளை அதிகரித்து, இப்போது சமயக் கல்வியைப் பரப்பி நல்லொழுக்கத்தையும், நல்வழிகளையும் ஊக்குவிக்கிறார்களென அறிந்தேன். அப்படிப் பட்ட சேவைகளை மேலும் அதிகரிக்கச் செய்வதற்கு எங்கள் ஒத்துழைப்பைக் கொடுப்பது யாவரினதும் முக்கிய கடமையாகும். என்னையும், எனது மனைவியையும் இப்படிப்பட்ட விழாவுக்கு உங்களுடன் கலந்து பங்குபற்றுப் பரிசுகளை வழங்கும் வாய்ப்பைத் தந்ததற்கு எங்கள் நன்றியைக் கூற விரும்புகின்றேன்.

இந்தச் சமயப் போட்டியில் பங்குபற்றியவர்களுக்கும், பரிசு பெறுபவர்களுக்கும, இந்தச் சபையிலிருக்கும மக்களுக்கும் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். நாங்கள் சைவ நெறிகளையும், கல்வியையும், அறிவையும் பெற்றுக் கொண்டோம். எங்களுக்குத் தருந்த தராதரப் பத்திரம், பதக்கம், பரிசுகள் ஆகியன கிடைத்துவிட்டன என்று எண்ணி, அத்துடன் கல்வியையும், அறிவையும் கைவிட்டுவிடாதீர்கள். முக்கியமான கடமை என்னவென்ருல் அப்படிப்பெற்ற அறிவைத் தங்களுடைய நித்திய வாழ்க்கையில கைக்கொண்டு அந்தச் சமய முறைகளின்படியும், தர்மத்தின்படியும் நடப்பதேயாகும். அல்லாவிட்டாற் பெற்ற கல்வியாலும், அறிவாலும் பயன் ஏற்படாது. தங்களுடைய நித்திய வாழ்க்கையில் மற்றவர்களுடைய கஷ்டங்களை உணராமலும், ஒருவருக்கும் உதவி செய்யாமலும், படித்த பாடங்களை வாய்ப் பேச்சினலும், வெளிப் பூச்சினலும் கூறித்திருந்தால் அதில் என்ன பயன்? படித்ததைத் திருப்பித் திருப்பிச் சொல்லக்கூடிய வல்லமை, அல்லது ஞாபகத்தில் வைத்திருக்கக் கூடிய வல்லமை அல்ல அதிலே தோன்றியபேருண்மைகளைத் தங்களுடைய ஒவ்வொரு நாள் வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பது தான் தர்மத்தின் முறையும், சிறப்புமாகும். அந்தக் கருத்துக்களையும் உண்மைகளையும் தான் நாங்கள் மனதிற் கொண்டு சமய முறைப்படியு, தர்மத்தின் முறைப்படியும் நடக்க வேண்டும். நான் இந்த வாழ்க்கையை முக்கியமாகக் கூறுவது ஏனெனில், நீதிமன்றத்தில் சிலர் நெற்றி நிறைய திருநீறு பூசிக் கொண்டு மிகவும பக்தியுடையவர்களாகவும், ஞானம் பெற்றவர்களாகவும் காணப் படுகிருர்கள். ஆனல் அவர்களிடம் கடன்பட்டவர்களுக்கு வீடு, வாசல் விலைப்படாமல் 3 அல்லது 6 மாத இணக்கத் தவணை கேட்டவுடனே அல்லது எவ்விதமான இணக்கமும கேட்டவுடனே இந்தக் குறி பூசியவர்கள் கொஞ்சமாவது தவணை கொடுக்க உதவி புரிய இணங்க மாட்டார்களென்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனபடியாற்றுன் இப்படி வெளிப் பூச்சினலும் வாய்ச் சொல்லினலும் அல்ல, தங்களுடைய நித்திய வாழ்க்கையிலே தான் சமய முறையின்படியும், தர்மத்தின்படியும் நடந்து கருணை காட்ட வேண்டும் தர்மம் வழங்குவது பணக் கொடையினல்

வளர்ச்சி 4-ம் பக்கம்

---

## குடமுழுக்கு விழா மலர்

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் குட முழுக்கு விழா மலர் வெளியீட்டு வைபவம் நாளை மாலை 6 30 மணிக்கு இளைப்பாறிய இந்துக் கல்லூரி அதிபர் திரு. ந. சபாரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

இம் மலர் விற்பனை நிதி கோவில் திருப்பணிக்குச் சேர்க்கப்படும். விலை ரூபா 7-50.

---

## யாழ். பல்கலைக் கழக வளாகம்

### பிரதம மந்திரி அவர்கள் 6—10—74 அன்று திறந்துவைப்பார்

கனம் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள வட பகுதிக்கு முதன் முதல் விஜயமளித்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தை எதிர்வரும் 6-10 74 அன்று சுபமுகூர்த்தத்தில் சிறப்பான முறையில் திறந்துவைப்பார். ஷை வளாகம் பரமேஸ்வராக் கல்லூரியிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும நிறுவப்பெறும்.

---

## சிறுபான்மை இனத்துக்கு இந்தியாவின் பெரும்பான்மை மதிப்பு

பாரத நாட்டின் ஐந்தாவது சனதிபதியாகத் திரு. பருக்டீன் அலி ஆகமத் அவர்கள் இலட்சக்கணக்கான மேலதிக வாக்குகளால் தேரிவு செய்யப் பெற்றார்.

இஸ்லாமிய இனத்திலிருந்து இரண்டாவது முறை இந்தியக் குடியரசு அதிபதி தேரிவுசெய்யப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஜனநாயகச் செயல் வீரம் ஆகும்.

---

## பெரியபன்றிவிரிச்சான் பிள்ளையார் கோவில்

### சைவாபிமானிகளுக்கு ஒரு விண்ணப்பம்

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் தாபிக்கப் பெற்ற இக்கோவில் தொடர்ந்து அப் பகுதிச் சைவ மக்களுக்குப் பயன்படுகின்றது. குடியேற்றத் திட்டத்தில் உள்ள மக்களில் முப்பத்தைந்து குடும்பங்கள் சைவ சமயத்தவர்கள். இக் கோயிலுக்கு ஒரு நிருவாக சபையுண்டு. எனினும் கோயில் ஒழுங்குகள் இப்பொழுது திரு. த. சிவபாதசுந்தரம் அவர்களின் பார்வையில் நடைபெறுகின்றன. தூபி முதலிய கட்டிட வேலைகளும் செய்யப்பட வேண்டிய நிலையிலிருக்கின்றன. ஆகவே சைவ சபைகள் இக் கோயிற் பரிபாலனத்திலே கவனம் எடுத்தல் அவசியம்.

இக்கோயில் மடு ரோட்டிலிருந்து 10 மைல் தூரத்திலே காட்டுப் புறத்தில் உள்ளது. சைவ அபிமானமுள்ள அன்பர்கள் இக் கைங்கரியத்திலே கருத்து வைப்பது நல்லது.

---

நேயர் நெஞ்சம்

## ஆனந்த வருடச் சிவராத்திரி விரதம்

இந்துசாதனம்.
கனம் பத்திராதிபர் அவர்களுக்கு
ஐயா!

இவ் விரதம் மாசி மாதம் இருபத்தேழாந் தேதி செவ்வாய்க்கிழமை என்கிறது வாக்கிய பஞ்சாங்கம். அன்றிரவு 53 நாழிகை 33 விநாடி வரையுமே சதுர்த்தசி. அப்பால் அமாவாசை கூடுகிறது. திருக்கணிதம் இதை 26ம் தேதி திங்கட்கிழமை எனக் கூறுகின்றது. அன்று திரயோதசி 44 நாழிகை 54 விநாடி வரையுமே. பின்பு சதுர்த்தசி கூடி மறு நாள் செவ்வாயன்று 51 நாழிகை 10 விநாடிக்கு அற்றுப்போகின்றது.

இவ்விரதத்தை எப் பஞ்சாங்கத்தின்படி அனுட்டிக்கலாமென்பதை வெளியிடுவது விரதமனுட்டிப்போருக்கும் பேருபகாரமாயிருக்கும்.

மு. காங்கேசு
சிவசம்புப்புலவர் வளவு,
உடுப்பிட்டி 18-474.

---

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமிகம், காரணம் முதலிய சிவாகமங்களை தேவநாகரி எழுத்தில் தமிழ் மொழி பெயர்ப்புடன் வெளியிடுக

## கொழும்பு விவேகானந்த சபை வேண்டுகோள்.

கொழும்பு விவேகானந்த சபையின் எழுபத்தோராவது ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் சபையின் தலைவர் திரு. வே. க. கந்தசாமி (முன்னாள் மாவட்ட நீதிபதி) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் விவேகானந்த சபையின் உப தலைவர்களில் ஒருவராகிய திரு அருள். தியாகராசா அவர்கள காமிகம், காரணம் முதலிய சிவாகமங்களைத் தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிட வேண்டுமென்று கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது, மேலும் இச் சிவப்பணியை இனிது நிறைவேற்ற திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம், திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஆகியவற்றின் முதல்வர்களின உதவியைக் கோருமாறு அவர் கேட்டுக் கொண்டார். கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியராகிய, பிரம்மஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்கள இதனைப் பெரிதும் ஆதரித்துப் பேசினார்கள் இச சிவாகமங்களை அச்சுவாகன மேற்றி செல்லரித்து இறந்துபட்டழியவிடாது காத்தல் சைவ மடங்களினதும், சைவப் பெருமக்களினதும் பெருங் கடமையென்றும், இச் சிவாகமங்களை தேவநாகரி எழுத்தில் தமிழ்மொழி பெயர்ப்புடன வெளியிட்டால் அவை தென்னாட்டவர்களுக்கு மாத்திரமன்றி வடநாட்டவருக்கும்; மேலைத் தேசத்தவர்க்கும் பயன் படுமென்றும் குருக்கள் அவர்கள் கூறினார்கள். 'இம் மூன்று சைவத் திருமடங்களும, சிவநெறியையும்: செந்தமிழையும் பரப்பச் செய்துவரும் ஆக்க வேலைகளைப் பற்றியும் திரு. அருள். தியாகராசா எடுத்துக் கூறினார். ஆண்டு விழாவில நிறைவேற்றபபட்ட திரு. அருள் தியாகராசாவின் பிரேரணைகளாவன:

1. "வேதமோடாகமம் மெய்யா மிறைவனூல்" என்று பத்தாந் திருமுறையாகிய திருமந்திரம் கூறுகின்றது. சைவாகமங்கள் இருபத்தெட்டு. இவ்வாகமங்கள் பல இன்னும் அச்சேறாமல் இருக்கின்றன. காமிகாகமம், காரணாகமம, வாதுளாகமம், சுப்பிரபேதாகமம், புட்கராகமம் ஆகிய ஐந்து கிரந்த எழுத்தில் அச்சிடபபட்டுள்ளன இவைகளில் சிலவற்றிற்குத் தமிழ் மொழிபெயர்ப்புகளும் உள. இவற்றில் தமிழில் மொழிபெயர்க்கப்படாத ஆகமங்களைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டும, மொழிபெயர்க்கப்பட்ட ஆகமங்களை மீண்டும் சிறந்த முறையில பதிப்பித்தும் சைவ உலகிற்கு உதவுமாறு, திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம், திருக்கைலாச பரம்பரைத தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம ஆகியவற்றின் முதல்வர்களை இச் சபை மிக்க விநயத்துடன வேண்டுகின்றது மேலும் இத் திருபபணியை நிறைவேற்ற உதவுமாறு; தென்னாட்டிலும், ஈழநாட்டிலும் உள்ள சைவ சீலர்களை இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது.

2. ஈழநாட்டில் ஞானக் கொழுந்தாய் விளங்கிய யாழ்ப்பாணம் யோக சுவாமிகளை நினைவுகூரும் முகமாக ஒரு தபால் முத்திரையை வெளியிடுமாறு இலங்கை அரசாங்கத்தையும், தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் அவர்களையும் இச் சபை மிக்க விநயத்துடன் கேட்டுக் கொள்கின்றது.

இந்நாட்டிலுள்ள கிழக்கு மகாணத்தில் ஆறுமுகநாவலரென்று இந்நாட்டு மக்களால் போற்றப்படுபவரும், தமது கல்விப்பணி சைவப்பணிகளினால் ஈழநாட்டுக்கு பெரும்புகழையீட்டித் தந்தவரும், ஈழத்துச்சைவமக்கள அதிலும் சிறப்பாகக் கிழக்கு மாகாணத்துச் சைவமக்கள், பிற சமய போதனைகளால் மயங்கித் தமது சமயத்தைக் கைவிடாது காத்த பெருந்தகையாகிய சுவாமி விபுலானந்தர் அவர்களை நினைவுகூரும் முகமாக ஒரு தபால் முத்திரையை வெளியிடுமாறு இலங்கை அரசாங்கத்தையும தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் அவர்களையும் இச்சபை மிக்க விநயத்துடன் கேட்டுக் கொள்கின்றது,

4. சுவாமி விபுலானந்தர் அவர்கள் ஆறுமுகநாவலர் பெருமானிடத்தில் மிக்க பேரன்பு பூண்டவர். நாவலர் பெருமான் மீது பல பாடல்களைப் பக்திச் சுவை ததும்பப் பாடியிருக்கின்றார். நாவலர் பெருமான் தினத்தை ஒவ்வொராண்டும் கொண்டாடும் இச்சபையை சுவாமி விபுலானந்த தினத்தையும் ஒவ்வோராண்டும் கொண்டாட வேண்டுமென்று இவ் வருடாந்தக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகின்றது.

இந்த நாட்டில் ஐந்தாங் குரவரென்றும் அழைக்கப்படும் நாவலர் பெருமானுக்கும், சர்வ தேசப் புகழ் பெற்ற கலாயோகி ஆனந்த குமாரசாமிக்கும் தபால் தந்தித் தொடர்பு அமைச்சரின் முயற்சியால் இலங்கை நினைவு முத்திரைகளை வெளியிட்டிருக்கின்றது. அதே போல் இந்திய அரசாங்கம் இவ்வுலகிற்கு நன்னெறியை போதிக்க திருவள்ளுவருக்கும், மேல் நாட்டிற்குச் சென்று இந்து சமயப் பெருண்மைகளை விளக்கிய சுவாமி விவேகானந்தருக்கும், இன்னும் சில சுவாமிகளுக்கும் நினைவு முத்திரைகளை வெளியிட்டிருக்கின்றது என்று இரண்டாம், மூன்றும், நான்காம் பிரேரணைக் கொண்டுவந்த திரு அருள் தியாகராஜா தமது உரையின் கண் விளக்கிக் கூறினார்கள். சுவாமி விபுலானந்தர் அவர்கள் மிக்க சைவப்பற்று வாய்ந்தவரென்றும், அதன் காரணமாகச் சுவாமிகள் 1935ம் ஆண்டில் திருவண்ணாமலையில் நடைபெற்ற சைவ சித்தாந்த சமாஜத்தின் ஆண்டு விழாவில் தலைமை வகித்தார் என்றும் கூறித் தமக்கும் சுவாமிகளுக்கும் இருந்து வந்த தொடர்பைத் திரு. அருள். தியாகராசா அவர்கள் திறம்பட எடுத்துரைத்தார்கள்.

விவேகானந்த சபையின் பரீட்சைக் காரியதரிசி திரு. சி. கந்தசாமி, சுவாமியவர்களுக்கும், கொழும்பு விவேகானந்த சபைக்கும் பலகாலமாயிருந்து வந்த நெருங்கிய தொடர்பை எடுத்துக் கூறியதுடன் விவேகானந்த சபை, சுவாமியவர்களின் நினைவு தினத்தை ஒவ்வோராண்டும் கொண்டாட வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறினார்கள்.

---

## புதிய கொட்டகை

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலில் உள் வீதிக் கொட்டகையைத் திருப்பணிச் சபை வெகு துரிதமாக நிர்மாணித்து வருகிறது.

இக் கொட்டகைத் திருப்பணிக்கான கால்கோல் விழாக் கிரியைகளை ஆலய ஆதீன கர்த்தர் பிரமஸ்ரீ கை. சபாரத்தினக் குருக்கள் நடத்தி வைத்தார்.

கருணாகரப் பெருமான் மீது நிறைந்த பக்தி கொண்டவரான மலாயா அன்பர் திரு. மு. செல்லத்துரை அவர்கள் தமது நேர்த்திக் கடனைக் குறித்த கொட்டகைத் திருப்பணி மூலம் பூர்த்தி செய்ய முன்வந்துள்ளார் என்பது விசேடமாக குறிப்பிடத்தக்கது. குறித்த கருணாகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் 22.9-74 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B / 13199

1. மரிபால் யுவனித ஜெயராசா (மைனர்) அவரின் பிரதிநிதி
2. செல்லத்துரை ரெயினேல்ட் ஜெயராசா நம். 9 டேவிட்ரோட் யாழ்ப்பாணம்;

—வழக்காளி

எதிராக

1, பிரகாசம் சவிரிமுத்தும்
2. பெண் பிலோமினு
இருவரும் கரையூர் யாழ்ப்பாணம்

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் இல எம் பி 13199-ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணி 1974-ம் ஆண்டு செப்ரெம்பர் மாசம் 23 ந் திகதி திங்கட் கிழமை (23-9-74) முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

### தீர்வைத் தொகை

ரூபா 1595/— பின் 28-6-72 தொடக்கம் 2-8-73 வரை ரூபா 1000/— 12 வீத வட்டியும் பின் இறுபடும் வரை முழுத் தொகைக்கும 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 481 62 சதம்.

### காணியின் விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக சுண்டிக்குளி கோயிற்பற்று கரையூர் இறை குடியிருப்பு வளவு 7½ குழி கிணறும் குசினியும் கக்கூசும பயிர்வகைகளும் இதில் மேற்குப் பக்கமாக 29 அடி நீளமும 15 அடி அகலமும் கொண்ட குறிக்கப்பட்ட காணியின் இதல் இருக்கும் கல்வீடும் கிணறும மற்றும் பயிர்வகைகளும் மிகுதி ஆதனத்தில் இருக்கும் கக்கூசில் பாவிப்பும் போக்கு வரவு உருத்தும். இந்த ஆதனத்துக்கு எல்லை கிழக்கு இந்தக் காணியின் மிகுதி வடக்கு அடப்பன் ரேட்டு. மேற்கு செபமாலை பெண் மண்டவினி மாதாவின் ஆதனம், தெற்கு சவரி வயித்தியின ஆதனம், இந்த ஆதனத்தில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும இந்தக் கிணற்றுக்குப் போக்கு வரவு பாதை உரித்தும். மிகுதி ஆதனத்துக்கு புறநீங்கல்,

சி. செ. மாரிமுத்து
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
விதானைவளவு,
சித்தன்கேணி. 25-7-74
162 23-8

---

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

## அலங்கார விழா

ஆனந்த ஆவணித் திங்கள் 6-ஆம் நாள் (22-8 74) வியாழக்கிழமை ஆரம்பமாகி 2-9-74 வரை திரு விழாக்கள் தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும். (1-9-74, ஞாயிறு சங்காபிடேகமும் மணவாளக் கோலஉற்சவமும் இரவு 8மணியளவில் விநாயகப் பெருமான் புஷ்பப் பல்லக்கில் வெளி வீதி வலம் வரும் நிகழ்ச்சி இடம் பெறும். (2-9-74) திங்கள் தீர்த்தோற்சவமும். திருவூஞ்சலம் இரவு 9 மணியளவில் விநாயகப் பெருமான் முத்துச் சப்பரத்தில் வெள் வீதி வலம் வருதல் நிகழும். 3-9-74 செவ்வாய் வைரவர் விசேட பூசையும் நிகழ இருக்கின்றன.

அலங்காரத் திரு விழாவில் தினந் தோறும் மாலை 6-45 முதல் 8-15 வரை இசையரங்கு நிகழ்ச்சிகள் இடம பெறும். 1-9 74 ஞாயிறு மாலை யாழ். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்கள்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உருமபிராய் சின்னத்தம்பி இராசையா — வழக்காளி
வழ- இல. M B 12787 எதிராக
உரும்பிராய் வடக்கு உரும்பிராய் அம்பலவாணா மாரிமுத்து கைமபெண சிவஞானவலலி:
— எதிராளி

யாழ்பபாணம மாவட்டக் கோட்டின் M B 12789ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10-ம் திகதி (10-9-74) செவ்வாய்க்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 9028-75ம் 13-10-71 தொடக்கம் 11-5-72 வரைக்கும் ரூபா 5,000/- க்கு 9 வீத வட்டியும் அதன் பின முழுத் தொகைக்கும் இறுக்குமவரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 355-35. இதில் ரூபா 1000/— 29-11-73 ல் கொடுபட்டுள்ளது,

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோயிற்பற்று உரும்பிராய் இறை "மாலளன் சீமா, இளையஉடையான சீமா, குளத்துப்பத்தை, கொச்சி சீமா, மூக்கறையன் சீமா ஆத்தியடியுர் பெரியதோட்டம்' பர. நில இல 5 குளிகள் 17, கல்வீடும் கிழக்கெல்லையிலுள்ள கிணற்றில் அரைப் பங்கும் வான் பயிர் செய்பயிர்களும் சொல்லப்பட்ட பர நில இலா 5 குளிகள் 17 க்கு கிழக்கும் தெற்கும் சரவணமுத்து பெண மங்கையற்கரசிக்குரிய ஆதனம். வடக்கு ஒழுங்கையும் வயித்தியர் அருளம்பலத்துக்குரிய ஆதனமும், மேற்கு செல்லத்துரை பெண பாறுபதிப்பிள்ளைக்குரிய ஆதனம். இதடங்கலும் சொரியலாக அரைப் பங்கும். அதைச் சேர்ந்தவைகளும்,

நா. ஸ்ரீ ரங்கநாதன்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

6. கன்னதிட்டி ரோட்
யாழ்ப்பாணம. 26-7-74 158, 23—.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அச்சுவேலி வளலாய் தாமோதரம்பிள்ளை மகள் விஜயலெட்சுமி
M B 13438 எதிராக —வழக்காளி
அச்சுவேலி வளலாய் 1. தம்பிமுத்து வயித்திலிங்கமும் பெண 2. சின்னத்தங்கம்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 13438-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18-ம் திகதி (18 – 9 – 74) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத தொகை: முதல் வட்டி ரூபா 3,716-67-ம் 12-10-72 தொடக்கம் 10-4 73 வரைக்கும் ரூபா 2 500/- க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 365/25.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோயிற்பற்று வளலாய் இறை 'மண்டுவத்தை' பர: நில இலா 55 குளிகள் 11, இதில் பிரிவிடப்பட்ட பர. நில இலா. 13 குளிகள் 13 உத்தரவு பெற்ற உலாந்தா ரி, சின்னத்துரை அவர்களின் 928 எ இலக்கமுள்ள 28-6-56 தேதியிட்ட படத்தில் முதலாம் துண்டாகக காட்டப்பட்டுள்ளது, இப் படம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11519 ம இலக்க வழக்கில் அணைக்கப்பட்டுள்ளது. தென்னைகளும் கிணறும் சொல்லப்பட்ட பர நில இலா 13 குளிகள 13 க்கு எல்லை கிழக்கு சண்முகம் வெற்றிவேலுவுக்கும் தாமோதரம்பிள்ளை பெண் இராசம்மாவுக்கும் உரிய ஆதனமும. வடக்கு சிதம்பரப்பிள்ளை ஆறுமுகத்துக்குரிய ஆதனமும். 8 எட்டாவது துண்டும். பொதுக் கிணறும் போக்குவரத்துருமைகளும், மேற்கும் தெற்கும் இரண்டாம் எதிராளிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும, 8ம் துண்டிலிருக்கும் கிணற்றில் பங்கும் போக்கு வரத்துருமைகளும்,

பதிவு இல கே, 197/112:

6, கன்னதிட்டி ரோட், நா, ஸ்ரீ ரங்கநாதன்
யாழ்ப்பாணம், 3 8 74. கோமிஷனர் & விலைமதிப்பாளர்
159, 23-8-74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக மலர் வெளியீட்டுவிழா

பிரசித்திபெற்ற காரைநகர் திக்கரை முருகமூர்த்திகோவில் கும்பாஷேக மலர் வெளியீட்டு விழா எதிர்வரும 24-8-74 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும்.

இம் மலரில் இருபதிற்கு மேற்பட்ட ஈழத்து தமிழ் அறிஞர்களும், தென்னகத்து தமிழ் அறிஞர்களும் சமய அராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். கோவிலின் புதிய தோற்றம், கும்பாபிஷேக நிகழ்ச்சி புகைப் படங்கள், முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராய் எழுந்தருளிக் காட்சிகொடுக்கும் மூவர்ண அட்டை முகப்புடன் சைவத் தமிழுலகம் போற்றத்தக்க மலராக வெளி வருகிறது.

---

கோட்டு விற்பனவு

### விளம்பரம்

வழ: இல. M B 13122

அம்பலவாணர் கைம்பெண் சிவக்கொழுந்து, உரும்பிராய் தெற்கு — வழக்காளி

எதிராக

(1) கதிரவேலு சணபதிப் பிள்ளையும், (2) பெண் செல்லம்மா இருவரும், ஆனைக் கோட்டை. (3) சின்னத்தம்பி அருணாசலமும் (4) பெண் நாகம்மா, அத்தியடி, யாழ்ப்பாணம். (5) திருஞானசம்பந்தர் பரணிகிரிநாதம் (6) பெண் சகுந்தலை உரும்பிராய் வடக்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்கிறிக் கோட்டின் M. B. 13122 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1974ம் ஆண்டு புரட்டாதி மீ 25-ம் திகதி (25-9-74) புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முதலாம் காணி சுதுமலையிலும், பின் தொடர்ந்து 2ம் காணி நல்லூரிலும் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப் படும்.

தீர்வைதொகை:- 1973ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 5ம் திகதி 1-ம், 2-ம் எதிரிகள் மேற்காட்டிய வழக்காளிக்கு ரூபாய் 10,000/- மும் பின் 17-5-72 தொடக்கம் 5-4-73 வரை ரூபா 5000/-க்கு 10 வீத வட்டியும் பின் முழுத் தொகையும் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 587-25 சதம் கொடுக்கத் தீர்ந்த தீர்வைக்கு அமைவாக.

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை நறுவறக்காடு நி. பர. 16ம் குழி 7ம் இல் வடக்குப் பக்கமாக நி. பர. 10 இதற்கு எல்லை கிழக்கு:- மாலு பயிலுக்குரிய ஆதனம், வடக்கு:- கிடணர் வேலுப்பிள்ளைக்குரிய ஆதனம், மேற்கு:- மேற்காட்டிய 2ம் எதிரி K. கணபதிப்பிள்ளை பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனமும், கையொழுங்கை முகப்பும், தெற்கு:- இதன் மிகுதி ஆதனம், இது அடங்கலும்.

பதிவு இல: E. 361-135

(2) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை பண்டாரத்தோட்டம் நி.பர. 3ம் புதிதாகக் கட்டப்பட்ட கல்வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லைகிழக்கு:- சிவகுருநாதர் ராசம் கைம்பெண் குழந்தை நாச்சனுக்குரிய ஆதனம், வடக்கு:- கிழக்கெல்லைக் காணிக்கு போகும் ஒழுங்கை, தெற்கு:- வாய்க்கால் இது அடங்கலும்.

பதிவு இல: D. 248-286

சி. சே. மாரிமுத்து
கொமிஷனரும்,
விலை மதிப்பாளரும்.

விதானை வளவு,
சித்தன்கேணி 10-8-74. 161-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட மன்றில்

நாகேசு நாகமுத்து, சங்கானை கிழக்கு — வழக்காளி

இல: எம். பி. 13866 எதிராக

வயிரவன் கதிரவேலு கைம்பெண் அன்னம். நிச்சாமம் சங்கானை கிழக்கு, தனது சொந்த சார்பிலும், இறந்த வயிரவன் கதிரவேலுவின் சட்டபூர்வமான பிரதிநிதி என்ற முறையிலும் —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 13866ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1974ம் ஆண்டு புரட்டாதி மீ 20ம் திகதி (20-9-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3775/-ம், 1-6-73 தொடக்கம் 16-10-73 வரைக்கும் ரூபாய் 2350/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபாய் 699-70 சதம்

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை கிழக்கிறை "விளாங்குளி" பரப்பு நில இலாச்சம் (2) இரண்டும் குளி ($6\frac{1}{2}$) ஆறரையும் வான்பயிர் செய்பயிர்களும், எல்லை கிழக்கு:- கனகரத்தினம் பொன்னம்மாவினுதனம், வடக்கு:- எதிராளிக்குரிய ஆதனம், மேற்கு:- ஆள்வான் பொன்னனின் ஆதனமும், தன்னிலத்து ஒழுங்கை முகப்பும், தெற்கு:- ஐயன் பெண் சின்னப்பிள்ளையினுதனம், இதடங்கலும் தென்மேற்கேயிருக்கும் ஒழுங்கை முகப்பில் இருந்து வேலு சின்னவியின் காணியின் மேற்காகவும், மேற்கெல்லைக் காணியின் தெற்காகவும் வைக்கப்பட்ட தன்னிலத்து ஒழுங்கைகளால் இதற்குவரும் ஒழுங்கைப் பாவிப்புரித்தும் வடமேற்கேயிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும். வழிவாய்க்கால் பாவிப்பும்.

(2) ஷை இறை 'கலக்கலாசிட்டி' பர. நில. இலா எட்டும் குழி பததே முக்காலும், கிணறும் வீடும் வான்பயிர் செய்பயிர்களும், மேற்குக் கையொழுங்கை பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு:- பிளாய்க் பெண் செல்லம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு:- வல்லி சின்னனினுதனம், மேற்கு:- கையொழுங்கை, தெற்கு:- முதலி வயித்திலிங்கத்தினுதனமும், ஒழுங்கையும், முருகேசு பெண் பொன்னாச்சியினுதனமும், இதில கிழக்குப் புறமாகவுள்ள பர. நில. இலா குழி ($9\frac{1}{4}$) ஒன்பதே காலின் தெற்குப் புறமாக இருக்கிற வீடும் செய்பயிர் வான்பயிர்களும் நீங்கலாக மிகுதியடங்கலிற சொரியலாய் பர. நில. இலா. ஒன்றரையும், அதற்குரிய கிணற்றுப் பங்கும் இன்னும் அதற்குரியவைகளும்.

ஏ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
வெந்தீஸ் கொமிஷனரும்
விலை மதிப்பாளரும்

107, பெரிய தெரு,
யாழ்ப்பாணம்,
19-8-74 159, 23-8-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

(1) ஆறுமுகம் செல்லத்துரை —வழக்காளி

வழ, இல. M. B 11134 எதிராக

(1) சின்னத்தம்பி பேரம்பலம்
(2) சின்னத்தம்பி பேரம்பலம் கைம்பெண் பொன்னம்மா
(3) சந்தையா செல்லத்துரை
(4) பெண் கனகமணி எல்லோரும் திருநெல்வேலி,
(5) பேரம்பலம் கந்தசாமி நீர்வேலி, காலஞ்சென்ற முதலாம் எதிரியின் ஆதனத்துக்கு சட்டப்படி தத்துவகாரன் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11134ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஹு ஐப்பசி மீ 3ம் திகதி (3-10-74) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2630/-ம், 26-9-69 தொடக்கம் 18-4-70 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 446-97 சதம்,

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று திண்ணவேலி இறை 'சமரபாகுதேவன் வளவு' பர நில, இலா. 2 (VC) இந்த காணியின தெற்கு எல்லையில இருக்கும் கிணற்றில் பங்கும், அதில அடங்கிய செய்பயிர்களும் இதற்கு எல்லை வடக்கு:- ஒழுங்கை; கிழக்கு:- ஒழுங்கை, தெற்கு:- ஒழுங்கை; மேற்கு:- பேரம்பலம் பெண் பொன்னம்மாவின் ஆதனம். கல்லால் கட்டப்பட்ட வீட்டின் கிழக்குப்புற சுவரும் அடங்கலும் இவை யாவற்றிலும் பிரிவிடப்படாத $\frac{3}{4}$ பங்கும். அதனுடன் சேர்ந்த சொத்து உரிமைகளும்.

(2) ஷை 'சமரபாகுதேவன் வளவு' பர. நில இலா. $1\frac{1}{2}$ (VC) செய்பயிர்களும் ஒரு அறையும் முன்புறமும் பின்புறமும் இருக்கும விறாந்தைகள உட்பட, தெற்கு எல்லையில் இருக்கும கிணற்றில் பங்கும். வடக்கு ஒழுங்கைக்கு கிழக்குப் பக்கத்தில் காணிக்குள்ளால் போகும் பாதைப் பங்கும இதற்கு எல்லை கிழக்கு: சின்னத்தம்பி பேரம்பலம் பெண் பொன்னம்மாவுக்குமுரிய ஆதனம, வடக்கும தெற்கும்:- ஒழுங்கைகள், மேற்கு:- ஆறுமுகம் சின்னக்குட்டிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இது அடங்கலும்.

[illegible]
167/1 கோவில் வீதி, [illegible]
நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம். 19-8-74, 164-74

---

## Commission Sale

## கோட்டுக்கோமிஷன் விற்பனவுவிளம்பரம்

வழக்கு இல: 11548 பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

(1) இராசரெத்தினம் இராதகிருஷ்ணன், அல்வாய் தெற்கு, —வழக்காளி

எதிராக

(1) சின்னையா இராசரெத்தினம் பெண்
(2) நல்லம்மா (இருவரும்) அல்வாய் வடக்கு —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களை 1974ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 19ம் திகதி (19—9—74) வியாழக்கிழமை முற்பகல் 9 மணிதொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று

(1) அல்வாய் பெற்றியனுர் குறிச்சியிறை உப்புக்கிணற்றடி நி பர. 6, 1/8 இதில் நடுப்பகுதி பிரிவிடல் ஆட்சிப்படி நி. பர. 1, குளி 17, எல்லை கிழக்கும் தெற்கும்:- வேலன் சபாபதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு:- தெரு. மேற்கு:- காசிநாதர் கந்தையா பெண் செல்லாச்சிக்குரிய ஆதனம். இவை அடங்கலும்.

(மதிப்பிட்ட விலை ரூபா 3,500/-)

(2) அல்வாய் மாப்பாணக் குறிச்சியிறை குறும்பி ஒல்லை நெற்பரப்பு $15\frac{3}{4}$ ஷை நெ. ப. 14, 5/8 ஷை நெ. பர. $3\frac{1}{2}$ இப் பிரிவுகளில் வடக்குப் புறமாக 1/6 பங்கு நீக்கி அதற்கடுத்த தெற்குப் புறமாக நெ. பர. 17ல் மேற்குப் புறமாக நெ பர. 3ம் வடக்குப் புறமாக நெ. பர. 4 நீக்கி மிகுதிக்கு ஆட்சிப்படி நெ. ப. 13ல் வடக்கரை வாசிக்கு நெ. ப. $6\frac{1}{2}$ நீக்கி தெற்கரைவாசிக்கு நெ. ப $6\frac{1}{2}$ எல்லைகிழக்கு:- சுப்பிரமணியம் கார்த்திகேசுவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு:- யோகரத்தினம் பெண் தங்கமுத்துவுக்குரிய ஆதனம், மேற்கு:- தம்பையா பெண் சிவகாமிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்; தெற்கு:- வாரித்தம்பி சின்னத்தம்பியின் உரிமைக்காரருக்குமுரிய ஆதனம்; இவை அடங்கலும்:

(மதிப்பிட்ட விலை ரூபாய் 2,600/-)

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை:- | ரூபா | 2043 00 |
| வட்டி ரூபா 1360/-க்கு 9 வீதப்படி 24-9-71 தொடக்கம் 21-8-72 வரை | | 111 00 |
| வட்டி ரூபா 2154/-க்கு 5 வீதப்படி 22-8-72 தொடக்கம் 21-7-74 வரை | | 206 54 |
| வட்டி ரூபா 2154/-க்கு 5 வீதப்படி 2 -7-74 தொடக்கம் 19-7-74 விற்பனவு வரை | | 17 94 |
| மொத்த ரூபா | | 2,378 48 |

'சிவலிங்க நிலையம்''
வி. எம், ரோட்,
பருத்தித்துறை,
19-8-74

க. நல்லலிங்கம்
கோட் கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்
168-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ: இல. M. B 13191

சின்னையா சரவணமுத்து நீர்வேலி —வழக்காளி

எதிராக

(காலஞ்சென்ற) செல்லையா தம்பிமுத்து, நீர்வேலி

(1) விசுவலிங்கம் இராசதுரையும்
(2) பெண் நேசமலர் இருவரும் நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(காலஞ்சென்ற செல்லையா தம்பிமுத்துவின் சட்டபூர்வமாக நியமிக்கப்பட்ட பிரதிநிதி இரண்டாவது எதிராளி) —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13191ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1974ம்ஹு புரட்டாதிமீ 10-ம் திகதி (10-9-74) செவ்வாய்க்கிழமை முற்பகல்10 மணிதொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2000/- 22-6-72 தொடக்கம் 4-7-73 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 12 வீத வட்டியும அதற்குப்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 611/-

### ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை 'நல்லிகுடியிருப்பும கடப்பன் சீமாவும் கோணையன் தோட்டமும்'' இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு $5\frac{1}{4}$ம் வீடும் எல்லை கிழக்கு:- தேவசகாயம் பெண் விக்ரோறியாவின் ஆதனம், வடக்கு:- கந்தையா பெண் அழகம்மாவின் ஆதனம், மேற்கு:- ஆறுமுகம் பெண் வள்ளிப்பிள்ளைக்கும மறுபேருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு:- பூதன் சின்னப்பொடிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இதன் முழுவதிலிமிருந்து பிரிக்கப்படாத ($\frac{1}{2}$) பங்கும். வட எல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரிமையும்.

(2) ஷை நீர்வேலி இறை 'மங்களவத்தைதோட்டமும் மேல் நிலமும் நெல்லிக்கலட்டியும்' இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு $4\frac{1}{4}$ம் செய்பயிர் வான்பயிர்வகைகளும், எல்லை கிழக்கு:- ஆறுமுகம் இராமலிங்கத்தின் ஆதனம், வடக்கு:- ஆறுமுகம் பெண் வள்ளிப்பிள்ளையின் உரிமையாளர்களின் ஆதனம, மேற்கு:- ஒழுங்கை, தெற்கு:- ரோட்டு இதடங்கலும் பிரிக்கப்படாத அரை ($\frac{1}{2}$) பங்கும், வட எல்லையில் இருக்கும கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால உரிமையும் அதைச் சேர்ந்தவைகளும்.

வே. சோபாலபிள்ளை
கொமிஷனர், விலைமதிப்பாளர்

22, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 23—7—74 160, 23-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஞ ஆவணி மீ எ-உ வெள்ளிக்கிழமை [1974]

# சைவ சமயக் குருகுலப் பயிற்சிச் சாலை

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மடத்திற் சென்ற ஞாயிறன்று நடைபெற்ற சைவ சமயக் குருமார் கூட்டத்திலே ஆசியுரை வழங்கிய குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சிவானந்த குருகுலம் சீராகப் புனர் அமைக்கப்பெற்று ஊரார்ன் நன்மதிப்பையுறுவதற்கான பணியில் யாவரும் பங்கு கொள்வது அத்தியாவசியம் என்றும், அது சிவப் பணியாகும் என்றும புத்திமொழி புகன்றார்கள். இக் கருத்தை விருத்திசெய்து அக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாச நாதக் குருக்கள் அவர்கள் நற்றொண்டாக அமையும் இப்பெரு முயற்சிக்குச் சைவ பரிபாலனசபை, நல்லை ஆதீனம் போன்ற அமைப்புக்கள் ஊக்கமும் ஆக்கமும் உதவிச் சமயப் பயிற்சி வளர்ச்சியைப் பேணுதல் கடமையாகும் என்று கூறினார்கள்.

திருக்கேதீச்சரத்திலே சிறப்பாக ஓங்கிவந்த சிவானந்த குருகுலம் தொடர்ந்து ஆங்கு இயங்குமுடியாமைப்பற்றி வருந்துகின்ற பொதுமக்கள் யாழ்நகரிலே அக்குருகுலம் அமைவதற்கு முயற்சி செய்வது போற்றப்பட வேண்டியதொன்று. இறை வழிபாடொன்றே எம்மை ஈடேற்றவல்லதென்ற எண்ணம இப்பொழுது அரசியலில் அல்லும் பகலும் அருமையான காலத்தைக் கழித்து வந்த அறிஞர்களுக்கும் உதயமாகி வருகின்றது.

வேறு வழியொன்றும் எமக்கில்லை என்ற உண்மை உலகெங்கும் உண்டாகிவிட்டது. மக்கள் வாழ்வாங்குவாழ வேதநெறி தழைத்தோங்க வேண்டும் மிகு சைவத்துறை விளங்க வேணும் என்ற திருமுறைத் திருத்தொண்டர்களின் பெருநோக்கத்தை நாம் குறிக்கோளாக வைத்துக் குருகுலத்தை உருக்குலையாது காப்பாற்றுதல் சாலச் சிறந்த சமயப்பணியாகும். இந்த எண்ணத்தை விளக்கிச் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் மாவை ஆதீன சிவாகம வித்யா பூஷணமும் ஆசிரியர் திரு க. சிவராமலிங்கம் அவர்களும் இன்னும் பலரும் பிராமண சமூக சேவா சங்கத்தின் பெருமுயற்சியை ஆதரித்துப் பேசினார்கள். திருக்கோயில்கள் திகழ்வதற்குச் சிவப்பிராமணர்கள் வளம் வேண்டும். அவர்கள் நன்கலைப் பயிற்சி நிலையங்கள் இயங்கவேண்டும். குருகுலம் திருவுடன் பொலிய மக்கள் ஆதரவு நல்குதல் வேண்டும். இந்த நன் முயற்சி இறைவன் இன்னருளால் இனிது நிறைவேறச் சைவ பரிபாலன சபையாரும் பணி புரிவார்கள். சைவ மக்கள் வேத சிவாகம நெறி வழுவாது வாழ இப்பணி எப்பொழுதும் நின்று நிலவப் பரமேசுவரன் பெருங் கருணையை வேண்டுகின்றோம்.

## வேத சிவாகமங்களின் உண்மைகளைப் பரப்புதல் சிறந்த சமயத் தொண்டு

கொழும்பு விவேகானந்த சபையினது 71-ஆவது ஆண்டுக் கூட்டத்தில் திரு. அருள். தியாகராசா அவர்கள் காமிகம், காரணம் முதலிய ஆகமங்களை நாகரலிபியில் தமிழ்மொழிப் பெயர்ப்புடன் வெளியிடுதல் சிறந்த சைவப்பணியாகும் என்று கொணர்ந்த பிரேரணை சபையாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது இக்காலம் சைவ சமயம் சம்பந்தமான கருத்துக்களை எழுத்திலும், பேச்சிலும் வெளியிடுகின்றவர்கள் மாறுபடத் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு மக்கள் சைவசமயப் பற்றை இழக்கச் செய்வதற்குக் காரணம் வேத சிவாகம உணர்ச்சியின்மையாகும். நாவலர் பெருமான் வெளியிட்டுள்ள பாலபாடங்கள், புராண உரைகள், சைவசமயநெறி, பெரிய புராண சூசனம் முதலியன யாவும் வேத சிவாகமங்களில் கண்டெடுத்த உண்மைகளே யாகும். வேத நிந்தனை, ஆகம நிந்தனை செய்தல் பெருந் துரோகமாகும்.

நமது ஆலயங்கள் வேத சிவாகம முறைப்படி நிருவகிப்பதற்கு நாட்டில் வேதாகம அறிவு பெருகுதல் வேண்டும். அவ்வறிவு பெருகுதற்கு எங்கள் குருகுலம் சிறப்பாக வளரவேண்டும். அந்தணர்களே வேதசிவாகமங்களைக்கற்று அவற்றின்படி யொழுகி மக்களுக்கு அவ்வுண்மைகளைப் போதித்து மக்களை நல்வழிப்படுத்தலாம். அதனாலேயே திருஞானசம்பந்த சுவாமிகள் தாம் பாடிய திருப்பாசுரம் 20 திருப்பாட்டில் முதலாம் திருப்பாட்டை "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கினார். நாட்டில் தவம்பெருக அந்தணர் தங்கள் கடமைகளைச் செவ்வனே புரிதல்வேண்டும். அவர்கள் மூலமே நாட்டில் தவ வாழ்க்கை மற்றையவர்களுக்குப் பெருகும்.

அந்தணர்கள் தங்கள் கடமையையும், பெருமையையும் உணர்தல்வேண்டும். மற்றைய மக்கள் அவர்களுடைய தவவாழ்க்கைக்கு உறுதுணையாக வாழ்தல் வேண்டும்.

---

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்"

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்"

## சைவ பரிபாலன சபை அறிவித்தல்

அன்புடையீர்!

சபையினது வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெறவிருப்பதால் செப்டம்பர் மாதம் 15-ந் திகதிக்கு முன்னர் தங்களது உறுப்பினர் சந்தா பாக்கி (1974 பங்குனி வரை) ரூபா ………… செலுத்தி ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆண்டுச் சந்தா — ரூபா 5-00 (சித்திரை முதல் பங்குனி வரை)
ஆயுட் சந்தா — ரூபா 100-00

வை. இரகுநாதமுதலியார்
காரியதரிசி

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 15-8-74

பி. கு :- 1. விலாசமாற்றம் அல்லது அங்கத்தவர் இல்லாதிருப்பின் காரியதரிசிக்கு அறிவிக்கவும்.

2; தங்கட்கு அனுப்பப்பட்ட மாநாட்டு நிதி சேர்க்கும் பத்திரத்தையும் சேர்த்த பணத்தையும் உடன் அனுப்பி வைக்கவும்:

### அணிந்துரை அரங்கம்

## இந்து சமய மன்றம்

தொகுப்பாசிரியர் :
திரு. க. சி. குலரத்தினம்
(இளைப்பாறிய ஆசிரியர்)

வெளியிடுவோர் :
யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தார்.

யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக அதிபா சிவதர்ம வள்ளல் க, கனகராசா அவர்கள் 'இந்து சமய மன்றம்' என்ற தலைப்பில ஒரு சிறு நூலை இலவசமாக வெளியிட்டுளளார்கள் இந்நூலை இளைப்பாறிய ஆசிரியர் க, சி. குலரததினம் அவர்கள் தொகுத்துக் கொடுத்திருக்கின்றார்கள்.

"தமிழ் நாட்டில் காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள அருளாசியால் ஏறக்குறைய 300 இந்துசமய மனறங்கள் இதுவரை உருவாகி உளளன, நாமும தாய்நாடடைப் பினபற்றி மனறங்கள அமைத்து மதப்பிரசாரம செய்து பணிபுரிவோமாக என்ற முடிவுரையுடன வேண்டுகோள விடுககப்பட்டுள்ளது.

ஆறுமுக நாவலர் பாலபாடம், இந்துசமய மன்றத்து ஆண்டறிக்கை ஆகிய நூல்களைத் தழுவி எழுதப்பட்ட இப் பிரசுரத்தில் 'ஆலயங்களில் செய்யததகாதன", "ஆலயங்களில் செய்யத்தக்கன" "நீங்கள் செய்யத் தகுந்தவை, நல்லவை" இவ்வாறு பல தலைப்புகளில் விடயங்கள் இரத்தினச் சுருக்கமாகக் கொடுக்கபபடடுள்ளன.

மேலும் இத்தகைய மன்றங்கள் ஊர்கள்தோறும் ஆரம்பிப்பதன் மூலம் செய்யத் தக்க பணிகளும் விபரமாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளன,

காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்ற இப் பிரசுரத்தை மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக நிறுவகத்திடம இருந்து பெறறுக் கொள்ளலாம.

### சகலருக்கும் அன்பு...

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

அல்ல: துன்புறும் மக்களுக்குச் சிந்தனை செய்து, அன்பு வார்த்தைகளினாலோ, அல்லது உதவி செய்வதினாலோ, அல்லது இயன்ற வழிகளினாலோ செய்யும் செய்கைகளினால் பணத்திலும் கூடுதலாக நன்மைபெற முடியும். ஏழைகளுக்கும், நோயாளிகளுக்கும், வயோதிபர்களுக்கும், உதவி அற்றவர்களுக்கும், கைவிடப் பட்டவர்களுக்கும் தங்களுடைய நித்திய வாழ்க்கையில் இயன்ற முறையில் உதவி செய்வது எல்லோருடைய மறவாத, நித்திய கடமையுமாகும்.

இந்த இளைஞர் சபைக்கு மேலும் நன்மைகள் வளர்ந்து அதிகரித்து எல்லோருக்கும் நல்ல வாழ்வு தர வேண்டுமென்று ஆசிர்வதித்து எனது வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

### சிவபூசைச் சிறப்பு விழா

நாரந்தனையிலிருந்து நல்லூருக்குத் தேர்த் திருவிழாவுக்குப் பாதயாத்திரையாக வந்த அடியார்கள் வில்லூன்றியிலேயே ஒரு சிவபூசைச் சிறப்புவிழாவும் நடத்தினர். அவ்வமயம் புலவர் மணி த. குமாரசுவாமிப்பிள்ளை, சித்தாந்த வித்தகர் மு. மயில்வாகனம முதலிய சிவபூஜா துரந்தரர்கள் உரை நிகழ்த்தினர்கள்.

## சொக்கனின் எழுத்துப் பணிக்கு வெள்ளி விழா

தமது பதினான்காம் வயதிலேயே எழுத்துத் துறையிலே ஈடுபடத் தொடங்கி கடந்த மூப்பதாண்டுகளாய் இடைவிடாது எழுதிவரும் ஈழத்தின் பிரபல எழுத்தாளரான திரு. க. சொக்கலிங்கம் B. A. ["சொக்கன்"] தமது முதல் நாவலாகிய "மலர்ப் பலியை" 1949-ஆம் ஆண்டில் எழுதி ஈழகேசரியில் வெளியிட்டார். 1946-ஆம் ஆண்டிலேயே "மின்மினி" மாசிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது "கடைசி ஆசை" என்ற சிறுகதைக்கு முதற் பரிசு பெற்ற இவர் எழுத்துத் துறையிலே 1949 ஆம் ஆண்டு தொடக்கமே ஈடுபட்டு உழைத்தமையால் இவ்வாண்டைத் தொடக்கமாகக் கொண்டு அன்னாரின் வெள்ளி விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென அன்னாரின் இரசிகர்களில் சிலர் முன் வந்துள்ளனர்.

வெள்ளி விழாவை இவ்வாண்டிறுதியிலேயே நடாத்துவதெனவும், அதன் நினைவாக சொக்கனின் இதுவரை வெளியாகாத நாடகங்கள், சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகளின் தொகுப்பொன்றை வெளியிடுவதெனவும் குழு தீர்மானித்துள்ளது. விழாவினைச் சிறப்பாக நடாத்த திரு. இ. நாகரத்தினம் அவர்களை தலைவராகவும், திரு. இ. பஞ்சலிங்கம், திரு. சு. சச்சிதானந்தம் ஆகியோரை இணைக் காரியதரிசிகளாகவும் கொண்ட ஒரு சபையும் நிறுவப் பெற்றுள்ளது.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 23—8—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர் : திரு. [illegible] சிவப்பிரகாசம்
[illegible] : திரு. மு. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org